# முழுக்கு ஞானஸ்நானம்



ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — Water Baptism)

# முழுக்கு
# ஞானஸ்நானம்

# பொருளடக்கம்

அறிமுகம்

1. மனந்திரும்பியதற்கான ஓர் அடையாளம் 1

2. அனைத்து நீதிகளையும் நிறைவேற்றுதல் 6

3. நீங்கள் இயேசுவின் சீஷர் என்பதற்கான சாட்சி 13

4. இயேசுகிறிஸ்துவின் மீது நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்கான சாட்சி 20

5. இயேசுவுடனான உங்கள் அடையாளத்தின் பிரகடனம் 26

6. நல்மனசாட்சியின் உணர்வு 32

7. பொதுவான கேள்விகளுக்கான பதில்கள் 36

# அறிமுகம்

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் வாழ்க்கையில் முழுக்கு ஞானஸ்நானம் என்பது மிக முக்கியமான ஒரு அனுபவமாகும். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரைப் பின்பற்றத் தீர்மானித்த நாம் அனைவருமே நிச்சயமாக ஒரு கட்டத்தில், இந்த முழுக்கு ஞானஸ்நான அனுபவத்திற்குள் வருகிறோம். முழுக்கு ஞானஸ்நானம் என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொண்ட அனைவருக்கும் கொடுத்த ஒரு கட்டளையாகும். அவருடைய கட்டளைக்கு நாம் அனைவருமே கீழ்ப்படிய வேண்டும். ஆகவே, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கத் தயாராகும் நீங்கள், அதன் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் தேவனுடைய வார்த்தையிலிருந்து எளிதாகப் புரிந்துகொள்ள, இந்தச் சிறிய புத்தகம் உங்களுக்கு உதவி புரியும்.

முழுக்கு ஞானஸ்நானம் பற்றிய முக்கியமான ஆறு சத்தியங்களை இதில் நாங்கள் தொகுத்து எழுதியிருக்கிறோம். அவை:

1) மனந்திரும்பியதற்கான ஓர் அடையாளம்
2) அனைத்து நீதிகளையும் நிறைவேற்றுதல்
3) நீங்கள் இயேசுவின் சீஷர் என்பதற்கான சாட்சி
4) இயேசுகிறிஸ்துவின் மீது நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்கான சாட்சி
5) இயேசுவுடனான உங்கள் அடையாளத்தைப் பிரகடனப்படுத்துதல்
6) நல்மனசாட்சியின் உணர்வு

மேலும், முழுக்கு ஞானஸ்நானம் பற்றிய மக்களுடைய பல பொதுவான கேள்விகளுக்கும் இந்தப் புத்தகத்தின் மூலம் பதில் அளித்திருக்கிறோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆசிஷ் ராய்ச்சூர்

# 1
# மனந்திரும்பியதற்கான ஓர் அடையாளம்

யோவான் ஸ்நானகன்தான் புதிய ஏற்பாட்டில் முழுக்கு ஞானஸ்நானம் பற்றி முதன்முதலாக அறிவித்து, மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். இந்த யோவான், இயேசுகிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருந்துவந்தான். இந்த யோவானுக்கு தேவன் கொடுத்த பிரதானமான பொறுப்பு, இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அறிமுகப்படுத்துவதும், இயேசு செய்ய வேண்டிய ஊழியங்களுக்கான ஆயத்தப் பணிகளைச் செய்வதும் ஆகும்.

**மாற்கு 1:4,5**

**4 யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங்கொடுத்து (கிரேக்கம் "பாப்திசோ"), பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் (கிரேக்கம் "பாப்திஸ்மா"), பிரசங்கம்பண்ணிக்கொண்டிருந்தான்.**

**5 அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும், அவனிடத்திற்குப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.**

யோவான் மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானம் கொடுத்தான். அதாவது, மனந்திரும்பி வந்தவர்களுக்கு யோவான் தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

“மனந்திரும்பு” மற்றும் “மனந்திரும்புதல்” என்ற வார்த்தைகள் கிரேக்க மொழி வார்த்தை *‘மெத்தனோய்யா’* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் அர்த்தம் “மனம் மாறுதல், அல்லது நோக்கம் மாறுதல்“ என்பதாகும். அது எப்போதும் சிறந்த மாற்றத்தை உள்ளடக்கியது. புதிய

ஏற்பாட்டில் மனந்திரும்புதல் என்பது, நம்முடைய பாவங்கள், பாவ வழிகளிலிருந்து, தேவனிடம் திரும்புதல் அல்லது தேவன் காட்டும் வழியில் வாழ்தல் என்பதாகும், அதாவது நம்முடைய மனது அல்லது நம் வாழ்வின் நோக்கத்தை மாற்றுவதாகும்.

யோவானால் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டு, பிரசங்கிக்கப்பட்ட மனந்திரும்புதல் என்பது:

- பாவங்களை அறிக்கையிடுதல் (மாற்கு 1:5). அதாவது, தேவனுக்கு முன்பாக செய்த குற்றம் குறைகளை உணர்ந்து, ஒத்துக்கொள்வது.
- *"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளை"* கொடுத்தல் (லூக்கா 3:8). அதாவது, மனந்திரும்பிய வாழ்க்கையில் ஏற்பட்ட நல்ல மாற்றங்களை நடைமுறை வாழ்வில் வெளிப்படுத்துதல் (லூக்கா 3:11-14).

அதாவது, முதலாவது மனதில் மாற்றம் (சிந்தனையில்) மாற்றம் ஏற்படுகிறது, பிறகு அதன் விளைவாக வாழ்க்கையில் (வாழும் வழிமுறையில்) மாற்றம் ஏற்படுகிறது.

*"பாப்திசோ''* என்ற கிரேக்க மூலமொழியிலிருந்து வரும் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையின் பொருள், "முழுக்குதல், தண்ணீருக்குள் மூழ்குதல், தண்ணீருக்கு அடியில் செல்லுதல், மூழ்கச் செய்தல் மற்றும் தண்ணீருக்குள் சென்று சுத்திகரிக்கப்படுதல்" என்பனவாகும். ஞானஸ்நானம் கொடுத்தல் என்பது, *"பாப்திஸ்மா"* என்ற கிரேக்க மூலமொழிச் சொல்லிலிருந்து வருகிறது. இதன் பொதுவான அர்த்தம், "முழுக்கு ஞானஸ்நானம்" என்பதாகும். இவ்வாறாக, மூலமொழிச் சொல்லின் அர்த்தமானது புதிய ஏற்பாட்டின் காலத்தில் நடைமுறையில் இருந்த வழக்கத்தின்படியும், ஆவிக்குரிய முக்கியத்துவத்தின்படியும், முழுக்கு ஞானஸ்நானம்

நடைமுறையில் ஒருவரைத் தண்ணீருக்குள் மூழ்கச் செய்து வெளியில் எடுப்பதாகும். இதன் ஆவிக்குரிய அர்த்தத்தை நாம் பின்வரும் பகுதிகளில் பார்க்க இருக்கிறோம். **ஆகவே, புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் என்பது, தண்ணீரை ஒருவர் மீது தெளித்துக் கொடுப்பது கிடையாது; மாறாக, ஒருவரை முழுவதுமாகத் தண்ணீருக்குள் மூழ்கச் செய்து கொடுப்பதாகும்.**

## மனந்திரும்பி விசுவாசி

மனந்திரும்புதலின் செய்தியானது, நாம் ராஜ்யத்தின் நற்செய்தியை விசுவாசிப்பதன் மூலமாக, தேவனின் ராஜ்யத்திற்குள் வருவதற்கான அழைப்புடன் தொடர்புடையதாக இருக்கிறது.

**மாற்கு 1:14,15**
**14 யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:**
**15 காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.**

அதற்குப் பின்வந்த நாட்களில், அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு திருச்சபை மக்களுக்கு இதைப் பின்வருமாறு விளக்குகிறார்:

**அப்போஸ்தலர் 19:4**
**அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.**

மனதிலும் நோக்கத்திலும் ஏற்படும் மாற்றம்தான், நம் மனந்திரும்புதலில் முதலாவதாக உள்ளது. நம்முடைய சொந்த வழிகள் அழிந்துவிட்டன என்பதை நாம் உணர்கிறோம். பாவத்தின் வழிகளோ, உலகத்தின் வழிகளோ, இருளின்

வழிகளோ அல்லது நாம் பின்செல்லும் நடைமுறைகளோ நித்திய வாழ்விற்கு நேராக நம்மை அழைத்துச் செல்வதில்லை. நம் வழிகளைப் பற்றிய மனமாற்றம் நம்மில் ஏற்பட்டவுடன், நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைத் தெரிந்துகொண்டு, அவர் அளிக்கும் இரட்சிப்பின் இலவச ஈவைப் பெற்றுக்கொண்டு தேவனுடைய மகிமையான ஒளியின் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முற்படுவோம். நாம் இப்போது இயேசுகிறிஸ்து மற்றும் அவருடைய ராஜ்யத்திற்கு ஏற்றபடி நமது சிந்தனையை சீரமைக்கிறோம். இவ்வாறாக, மனந்திரும்பி, அவரை நம்புகிறோம்.

## மனந்திரும்பி, விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுங்கள்

**மாற்கு 16:15,16**

**15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.**
**16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.**

**அப்போஸ்தலர் 2:38,41**

**38 பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**
**41 அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.**

இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு, மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்த பிறகு, நாம் ஞானஸ்நானம் பெறத் தயாராக இருக்கிறோம். மனந்திரும்புதலும், இயேசு தரும் பாவமன்னிப்பு மற்றும் இரட்சிப்புக்காக அவரை விசுவாசிப்பதும், நாம் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதற்கான முன்நிபந்தனைகளாகும்.

நாம் மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் இரட்சிக்கப்படுகிறோம். நரகத்திற்குச் சென்று தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்படுவதற்குப் பதிலாக, நாம் தேவனின் பிள்ளைகளாக ஆக்கப்பட்டோம், நித்திய அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டோம், இரட்சிப்பைப் பெற்று, அவருடைய ராஜ்யத்திற்குப் பங்காளர்களாக உருவாக்கப்பட்டோம். இயேசுகிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம் நாம் கிருபையால் இரட்சிக்கப்பட்டோம் (எபேசியர் 2:8). நித்திய ஜீவன் என்பது தேவனின் ஈவு, நாம் செய்யும் எந்தக் காரியங்களினாலும் அதை சம்பாதிக்க முடியாது (ரோமர் 6:23). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, நாம் இரட்சிக்கப்படுகிறோம் (அப்போஸ்தலர் 16:31; ரோமர் 10:13)

முழுக்கு ஞானஸ்நானம் என்பது நமது இரட்சிப்பின் அனுபவத்தைப் பின்தொடர்ந்து செய்யப்படும் ஒரு காரியமாகும். இது மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் பெற்ற இரட்சிப்பை வெளிப்படுத்தும் செயலாகும்.

## சிந்தனைக்கு

1) “மனந்திரும்புதல்” என்றால் என்ன?
2) “ஞானஸ்நானம்” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?
3) ஒருவர் தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாக அவர் வாழ்க்கையில் என்னென்ன நடந்திருக்க வேண்டும்?
4) தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பதற்கான முன்நிபந்தனையை நீங்கள் நிறைவேற்றினீர்களா?

# 2

# அனைத்து நீதிகளையும் நிறைவேற்றுதல்

மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்து, யோவான்ஸ்நானகன் தன்னுடைய ஊழியத்தைத் தொடங்கிய பிறகு, தேவனாக இருந்து மனிதனாக மாறின இயேசுகிறிஸ்துதாமே, யோவான் ஸ்நானகனிடம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வருவது மிகவும் ஆச்சரியத்திற்குரியதாகும். ஏனெனில், மனந்திரும்ப வேண்டிய அவசியம் ஏற்படும்படி இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்திருந்ததில்லை. மேலும், அவர் ஒவ்வொரு நொடியும் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து, ஒரு பாவமும் இல்லாத பரிபூரணமானவராக வாழ்ந்தார். அவர் உலகத்தில் வாழும் எல்லா மனிதர்களுடைய பாவங்களையும் போக்கும் தேவ ஆட்டுக்குட்டியானவராக இருந்தார். அப்படியானால், இயேசு ஏன் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்?

இயேசுகிறிஸ்து ஏன் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தார் என்பதற்கான இரண்டு காரணங்களை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம்.

## அவர் இவர்தான்

**யோவான் 1:29-34**

**29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.**
**30 எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான்.**

**[31]நானும்இவரைஅறியாதிருந்தேன்;இவர்இஸ்ரவேலுக்குவெளிப்படும்
பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்க வந்தேன்
என்றான்.**

**[32] பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர்
புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக்
கண்டேன்.**

**[33] நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால்
ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர்
இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த
ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச்
சொல்லியிருந்தார்.**

**[34] அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று
சாட்சிகொடுத்துவருகிறேன் என்றான்.**

உலக இரட்சகராகிய மேசியா யார் என்று யோவான் ஸ்நானகன் சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது. மனந்திரும்பியதற்கு அடையாளமாக மாத்திரம் அல்ல, இஸ்ரவேலர்களுக்கும், இந்த உலக மக்கள் அனைவருக்கும், தேவ ஆட்டுக்குட்டி யார் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்ற கட்டளையை தேவன் யோவானுக்குக் கொடுத்திருந்தார். அவர் வந்து தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பது மட்டுமல்லாமல், ஆவியானவர் அவர் மீது வந்து இறங்கி அவரில் தங்கி இருப்பார். *"அவர் இவர்தான்"* (யோவான் 1: 13) என்று யோவான் புரிந்துகொள்வதற்கு இதைத்தான் அடையாளமாக தேவன் சொல்லியிருந்தார். ஆகவே, இயேசுகிறிஸ்து முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க முதல் காரணம் இதுவேயாகும். இந்த இயேசுதான் தேவனுடைய குமாரன் என்று சுட்டிக்காட்டி, மக்களிடம் சொல்வதற்காக, பிதாவாகிய தேவன் யோவானுக்கு இதை ஒரு அடையாளமாகக் கொடுத்திருந்தார்.

இது யோவானுடைய கண்ணோட்டத்திலிருந்து வந்தது.

இயேசு தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தது மிகவும் ஆச்சரியமானது. இயேசுவுக்கு யோர்தான் நதியில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அப்படியானால், அவர் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தார் என்பது தெளிவாகிறது. மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் இது மிகவும் தெளிவாகப் புலப்படுகிறது. *"இயேசு ஞானஸ்நானம் பெற்று (மூழ்கி), ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்"* (மத்தேயு 3:16).

## எல்லா நீதியையும் நிறைவேற்றுதல்

தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க இயேசு ஏன் யோவான் ஸ்நானகனிடம் போனார்? யோவான் மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தை மட்டுமே பிரசங்கித்தான், மற்றும் மனந்திரும்ப வேண்டிய அவசியம் எதுவும் இயேசுவுக்கு இல்லை என்றபோதிலும், தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க யோவான் ஸ்நானகனிடம் செல்லக் காரணம் என்ன என்பதை இயேசுவின் கண்ணோட்டத்தில் பார்ப்பது ஆச்சரியத்திற்குரியதாகும்.

யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகன் இயேசுவை சந்தித்தபோது நடந்தது இதுதான்:

**மத்தேயு 3:13-17**

**13 அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்.**
**14 யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்.**
**15 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.**
**16 இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி**

**புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.**
**17 அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.**

தன்னிடம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வந்த இயேசுவைப் பார்த்த யோவானுக்கு, அது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. அவர் யோவானுக்கு அருகில் வருவதைப் பார்க்கும்பொழுதே, "அவர் இவர்தான்" என்ற உணர்வு அவனுக்குள் பிறக்கிறது. இது அவனுக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் இன்னும் இயேசு மீது இறங்கவில்லை. வானத்திலிருந்தும் இயேசுவைப் பற்றிய பிதாவின் தொனி இடிமுழக்கம்போல இன்னும் முழங்கவில்லை. இருந்தபோதிலும், அவரிடம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வரும் சாதாரண மனிதராக அவர் தோன்றவில்லை. யோவானுடைய முழு ஊழியத்திற்கும் காரண கர்த்தாவான தேவ ஆட்டுக்குட்டி இவர்தான் என்ற உணர்வு அவனுக்குள் பிறக்கிறது. அந்த தேவ ஆட்டுக்குட்டி இவர்தான் என்ற உறுதி யோவானின் உள்ளத்தில் உருவாகிறது.

ஆகவே, இயேசுவுக்கு தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் தகுதி தனக்கு இல்லை என்பதை யோவான் உணர்கிறான். இருந்தபோதிலும், *"எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டும்"* என்பதற்காகவும், பிதாவின் சித்தங்கள் அனைத்தையும் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காகவும், தமக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்குமாறு இயேசு யோவானை கேட்டுக்கொள்கிறார்.

பாவத்திலிருந்து மனந்திரும்புகிறதற்காக மாத்திரம் அல்ல, "அதைவிட மேலான" ஒரு காரணத்திற்காகவும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற உண்மை இங்கு புலப்படுகிறது. ஆகவேதான், பாவமே

இல்லாத தேவ ஆட்டுக்குட்டியாகிய, தேவனுடைய குமாரனாகிய இயேசுகூட, முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அங்கு வருகிறார். அது பரலோகத்தில் உள்ள தன் பிதாவின் சித்தத்தை இந்தப் பூமியில் வெளிப்படுத்துதலின் ஓர் அடையாளமாகும். ஆகவே, தேவனுடைய சித்தத்திற்கும் தேவனுடைய ராஜ்யம் இந்தப் பூமியில் கட்டவிழ்க்கப்படுதலுக்கும், “சரி” என்று பதிலளிக்கும் ஒவ்வொருவரும், தேவனுக்கு “சரி” என்று பதில் அளிக்கும் வகையில் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள முன்வருவார்கள்.

இயேசுவைப்போலவே, நீங்களும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்பொழுது, தேவனுடைய எல்லா நீதியையும் நிறைவேற்றுகிறீர்கள். பிதாவாகிய தேவனுடைய பார்வையில் சரியான ஒரு செயலை நீங்கள் செய்கிறீர்கள். தேவனுடைய சித்தத்தை நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். உங்கள் வாழ்வில் நிறைவேற்றப்படுகிற தேவனுடைய சித்தத்திற்கும், பூமியில் தேவனுடைய ராஜ்யம் உங்கள் மூலமாக வெளிப்படுவதற்கும் நீங்கள் “சரி” என்று சொல்லுகிறீர்கள்.

தேவனுடைய சித்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியும்பொழுது, அதற்குரிய வெகுமதியை நீங்கள் பெறுகிறீர்கள். அவருக்குக் கீழ்ப்படிந்து நீங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதால், அவரிடமிருந்து பலனைப் பெறும் தகுதியை நீங்கள் பெறுகிறீர்கள். *“தம்மைத் தேடுகிறவர்களுக்கு”* தேவன் *“பலன் அளிக்கிறவராய்”* இருக்கிறார் (எபிரெயர் 11:6).

## தேவனுடைய சித்தத்தை நிராகரித்தல்

மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைப் பற்றி யோவான் ஸ்நானகன் பிரசங்கித்ததைக் கேட்ட சாதாரண மக்களில் அநேகர் அதை விசுவாசித்து, சந்தோஷமாக

ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், மதத் தலைவர்கள், பிரதான ஆசாரியர்கள், பரிசேயர்கள், வேதபாரகர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகள் போன்றவர்கள் யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆகவேதான், யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பற்றி இயேசு அவர்களிடம் கேள்வி கேட்டபொழுது, *“எங்களுக்குத் தெரியாது”* என்று சொல்லிவிட்டார்கள்.

**மாற்கு 11:30-33a**

**30 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்.**

**31 அதற்குஅவர்கள்:தேவனால்உண்டாயிற்றென்றுசொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்று கேட்பார்.**

**32 மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்பட வேண்டியதாயிருக்கும்; எல்லாரும் யோவானை மெய்யாகத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணி;**

**33 இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள்.**

இவ்வாறாக, யோவான் பிரசங்கித்த மனந்திரும்புதலுக்கும், மனந்திரும்பியதன் அடையாளமாக ஞானஸ்நானம் பெறுதலுக்கும் அழைப்பு விடுத்த யோவானுடைய பிரசங்கத்தை ஏற்றுக்கொள்ளாதது, அவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விருப்பம் இல்லாதவர்களாய் இருந்ததைக் காட்டுகிறது.

**லூக்கா 7:29,30**

**29 யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.**

**30 பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்.**

இன்று நாம் மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்பொழுது, நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறோம். நம்மைக் குறித்த தேவனுடைய சித்தத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம். எல்லா நீதியையும் நிறைவேற்றுகிறோம், தேவனுடைய பார்வையில் சரியான அனைத்தையும் நாம் செய்கிறோம். “தேவனே! உம் சித்தம் என் வாழ்வில் நிறைவேறட்டும்” என்று நாம் அவரிடம் சொல்கிறோம். இந்தப் பூமியில், நம் மூலமாக தேவனுடைய ராஜ்யம் வெளிப்பட “ஆம்” என்று சொல்கிறோம்.

## சிந்தனைக்கு

1) தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்படி, இயேசு ஏன் யோவான் ஸ்நானகனிடம் சென்றார்?
2) இந்த அத்தியாயத்தில் நீங்கள் கற்றுக்கொண்டதன் அடிப்படையில், தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்பொழுது நீங்கள் எதை வெளிப்படுத்துகிறீர்கள்?

# 3

# நீங்கள் இயேசுவின் சீஷர் என்பதற்கான சாட்சி

## இயேசுவுக்குச் சீஷராக மாற அழைப்பு

இயேசு இந்தப் பூமியில் ஊழியங்களைச் செய்தபொழுது, அவர் பிரசங்கித்தவைகளைக் கேட்கவும், அவரால் வியாதியிலிருந்து சுகம்பெறவும், வாழ்வில் தேவையான அற்புதங்களை அனுபவிக்கவும், திரளான மக்கள் கூட்டம் அவரிடம் வந்துகொண்டு இருந்தார்கள். அப்படி வந்த மக்களிடம், தாம் சொல்வதைக் கேட்பதற்காகவும், அற்புத அடையாளங்களைப் பார்ப்பதற்காகவும் மாத்திரம் தம்மிடம் வராமல், அவரைப் பின்பற்றும் சீஷர்களாக வாழ அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். தமக்கு சீஷர்களாக இருப்பது என்றால் என்ன என்றும், தம்முடைய சீஷனாக வாழ அவர்கள் செலுத்தவேண்டிய விலைக்கிரயம் என்ன என்றும் அவர் போதித்தார். அவ்வாறாக அவருக்கு சீஷராக வாழத் தீர்மானிக்கிறவர்களுக்கு அது அவ்வளவு சுலபமாய் இருக்காது, ஆனால் அழைப்பு எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தது. யார் வேண்டுமானாலும் அவருக்கு சீஷராக வாழலாம்.

இயேசுவுக்கு சீஷர்களாக வாழ்வதன் அர்த்தம் என்ன என்று அவர் கூறினவைகளில் சில:

1) தங்கள் போதகரும், எஜமானருமாகிய இயேசுவைப் போல மாறுவதே இயேசுவுக்கு சீஷராக வாழத் தீர்மானிக்கிறவர்களின் ஒரே இலக்காக இருக்க வேண்டும் (மத்தேயு 10:25).

2) தங்கள் எஜமானாகிய இயேசு பரியாசம், தவறான குற்றச்சாட்டுக்கள் மற்றும் உபத்திரவங்களை எப்படிச் சந்தித்தாரோ, அதுபோலவே, அவருடைய சீஷர்களும் அவற்றை சந்திக்கத் தயாரானவர்களாக இருக்க வேண்டும். (மத்தேயு 10:25)

3) தங்கள் எஜமானராகிய இயேசுவை விட எவரும் சிறப்பானவர்களாகவோ, பெரியவர்களாகவோ இருக்க முடியாது (மத்தேயு 10:24); இதன் பொருள் என்னவென்றால், தங்கள் எஜமானாகிய இயேசு நடந்த பாதையில்தான், அவருடைய சீஷர்களும் நடக்கவேண்டும், குறுக்கு வழிகள் எதையும் தேடக்கூடாது என்பதாகும்.

4) அவருடைய சீஷர்கள் நன்றாகவும் முழுமையாகவும் பயிற்றுவிக்கப்பட்டிருக்கும்போது, அவர்கள் தங்களுடைய எஜமானைப்போல இருப்பார்கள். (லூக்கா 6:40)

5) தங்கள் எஜமானாகிய இயேசுவின் வார்த்தைகளை விசுவாசித்து, அதன்படி அவருடைய சீஷர்கள் வாழவேண்டும். (யோவான் 8:31)

6) அவருடைய சீஷர்கள் இந்தப் பூமியில் உள்ளவர்கள் மீது வைக்கும் அன்பைவிட, அதிகமான அன்பை தங்களுடைய எஜமானாகிய இயேசுவின்மீது காட்ட வேண்டும். (லூக்கா 14:26)

7) இயேசுவுடைய சீஷர்கள் தங்கள் சிலுவையை அனுதினமும் சுமக்க வேண்டும் (லூக்கா 14:27). சிலுவை என்பது பாடுகள், பிரிவு, தியாகங்களைக் குறிக்கிறது.

8) இயேசுவுடைய சீஷர்கள் தங்கள் எஜமானுக்காக எதையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும் (லூக்கா 14:33) இதன் பொருள் என்னவென்றால், இயேசுவுடைய சீஷர்கள், இந்த உலகில் உள்ள மற்ற எதையும்விட, எந்த நபர்களையும்விட, தங்கள் எஜமானாகிய இயேசு மீது காட்டும் பாசம், நேசம்

பெரியதாக இருக்க வேண்டும்.

9) நாம் இயேசுவுடைய சீஷர்களாய் இருக்கிறோம் என்பதை மற்றவர்கள் மீது நாம் காட்டும் அன்பின் மூலம் மக்கள் புரிந்துகொள்வார்கள் (யோவான் 13:35).

10) தங்கள் வாழ்க்கையின் மூலம் பிதாவானவர் மகிமைப்படும்படியாக, சீஷர்கள் அதிக கனிகளைக் கொடுப்பார்கள் (யோவான் 15:8).

11) இயேசு செய்ததுபோலவே, அவருடைய சீஷர்களும் குணப்படுத்துதல், அதிசய அற்புதங்களைச் செய்தல், விடுவித்தல் போன்ற கிரியைகளைச் செய்ய வேண்டும். (மத்தேயு 10:1; யோவான் 14:12)

## சீஷர்களுக்கான முழுக்கு ஞானஸ்நானம்

இயேசு இந்தப் பூமியில் ஊழிங்களைச் செய்தபொழுது, இயேசுகிறிஸ்துவின் போதனையையும் அவருடைய ஊழியத்தையும் ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றி வாழத் தீர்மானித்தவர்களுக்கு, இயேசுவின் சீஷர்கள் முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அவர்களின் மதத்தலைவர்கள், அவர்கள் எடுக்கும் தீர்மானங்களைக் கவனித்துக்கொண்டிருந்ததால், அது அவர்களுக்கு அவ்வளவு எளிதாக எடுக்கக் கூடிய தீர்மானமாக இருக்கவில்லை. ஏனெனில், அவர்களது மதத்தலைவர்கள், இயேசுவின் மீது கோபமாகவும், அவருடைய போதனைகள் மற்றும் ஊழியங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவும் இருந்தார்கள். இருந்தபோதிலும் மக்கள் இயேசுவைத் தேடிவந்தார்கள், அவருடைய சீஷர்களிடம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டார்கள்.

**யோவான் 3:22**

**இவைகளுக்குப்பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங்கொடுத்துவந்தார்.**

**யோவான் 4:1-3**

**[1] யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது,**
**[2] யூதேயாவைவிட்டு மறுபடியுங்கலிலேயாவுக்குப் போனார்.**
**[3] இயேசு தாமே ஞானஸ்நானங்கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.**

ஆகவே, இயேசு போதித்தவைகளை ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றி வாழத்தீர்மானித்த மக்களுக்கு, இயேசுவுடைய 12 அப்போஸ்தலர்கள் (அல்லது சீஷர்கள்), ஞானஸ்நானம் கொடுக்கும் பயிற்சியை ஏற்கனவே பெற்றிருந்தார்கள். இயேசுவும், இந்த சீஷர்களும் யோவான் ஸ்நானகனிடம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்திருந்தபடியால், இவர்களும், இயேசுவின் சீஷர்களுக்கு அவ்வாறே ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்பதை இங்கே நினைவில்கொள்ள வேண்டும்.

## முழுக்கு ஞானஸ்நானமும் பிரதான கட்டளையும்

இயேசு உயிரோடு எழுந்து, பரலோகத்திற்கு ஏறிப் போகும்முன்பு, தேவனுடைய “பிரதான கட்டளை” என்று சொல்லப்படும் கட்டளையை தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார்.

**மத்தேயு 28:19,20**

**[19] ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
**[20] நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**

எல்லா தேசங்களுக்கும் போய், அவர்களை சீஷர்களாக்க வேண்டும் என்ற கர்த்தருடைய கட்டளையே பிரதான

கட்டளை ஆகும். இதில் “சீஷர்களாக்கி” என்ற கிரேக்க வார்த்தை, *“மெத்தேதியோ”* என்பதாகும். அதன் அர்த்தம், “மாணவனாக மாறுதல்”, *“கற்றுக்கொள்பவர்”* என்பதாகும். அதாவது, “ஒருவருடைய போதனைகளைப் பின்பற்றி வாழ்பவர்”, கற்றுக்கொள்ளும் விருப்பம் உள்ளவர், தன் எஜமானைப்போல மாற அவருடைய வார்த்தைகளில், பயிற்றுவிக்கப்படுபவர், போதிக்கப்படுபவர், மற்றும் பயிற்சி பெறுபவர் என்று அர்த்தமாகும் ஆகும். இது பெரும் முயற்சியோடு கூடிய சிந்தனையைக் குறிக்கிறது. நாம் ஏற்கனவே பார்த்தபடி, இயேசு நமக்குக் கற்பித்த போதனைகள் அனைத்தையும் கடைப்பிடித்து (பின்பற்றி), அவரைப் போலவே மாறவேண்டும் என்ற தீர்மானத்தை எடுப்பவர்களே இயேசுவின் சீஷர்களாவர். அதில், மற்றவர்களை அவருக்கு சீஷர்களாக்கும் கட்டளையும், அவர்களுக்கு (சீஷர்களாக மாறத் தீர்மானிக்கிறவர்களுக்கு) ஞானஸ்நானம் கொடுக்கும் கட்டளையும் உள்ளடங்கி இருக்கிறது. அவ்வாறு ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது, வேதாகமத்தில் சொல்லப்பட்ட தேவனின் தன்மையின்படி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.

**முழுக்கு ஞானஸ்நானம் என்பது, ஒருவர் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி அவருடைய சீஷராக வாழ, அவர் எடுத்த தீர்மானத்தின் சாட்சியே ஆகும்.** ஆகவே, மென்மேலும் இயேசுவைப் போல மாற, அவரைப் பற்றித் தொடர்ந்து கற்றுக்கொள்ள, பயிற்சி எடுக்க, உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கிறீர்கள். அவ்வாறான பின்தொடர்தலில் அவமானங்கள், பாடுகள், உபத்திரவங்கள், தியாகங்கள் போன்ற காரியங்களைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், அவைகளை எல்லாம் நான் சகிப்பேன், நிறைவேற்றுவேன் என்று சொல்லி நீங்கள் தீர்மானிக்கிறீர்கள். இவ்வாறாக, இயேசுவுடைய சீஷர்களாக

மாற நீங்கள் துணிந்து தீர்மானித்திருக்கிறீர்கள், அதிலிருந்து ஒருபோதும் நீங்கள் பின்வாங்குவதில்லை.

## சீஷர்களாக மாறியவர்கள் இயேசுவுக்கு சீஷர்களாக மாறுபவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல்

இவ்வாறாக, இயேசுவின் சீஷராக மாற தன்னை ஒப்புக்கொடுத்து, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து, அவருடைய சீஷராக வாழ்கிற ஒருவர், மற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவித்து, அவர்களில் இயேசுவின் சீஷர்களாக மாற விரும்புகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம். இயேசுவின் சீஷர்களாக மாறத் தீர்மானிக்கிறவர்களுக்கு அவருடைய சீஷர்களே ஞானஸ்நானம் கொடுக்கலாம். உதாரணமாக, எருசலேம் நகரில் இருந்த திருச்சபையில், பிலிப்பு என்பவர் உதவியாளராக (டீக்கன்) பணி செய்கிறார். அவர் சமாரியா பகுதிக்குப் போய் இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தார், மற்றும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசிகளுக்கு அவர் முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் (அப்போஸ்தலர் 8:12). மேலும், எத்தியோப்பியா ராணிக்கு நிதிமந்திரியாக இருந்த ஒரு எத்தியோப்பியா தேசத்தைச் சேர்ந்தவனுக்கு பிலிப்பு முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (அப்போஸ்தலர் 8:37,38).

தமஸ்கு நகரில் இயேசுவின் சீஷனாக வாழ்ந்துவந்த அனனியா என்பவன்தான் சவுலுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அந்த சவுல்தான் பின்பு பவுல் என்ற பெயரில், இயேசுவின் அப்போஸ்தலனாக ஊழியம் செய்தான் (அப்போஸ்தலர் 9:10,18).

## சிந்தனைக்கு

1) இயேசுவின் சீஷராக வாழ்வது என்றால் என்ன என்பதைப் பற்றி மேலே குறிப்பிடப்பட்ட 11 கருத்துக்களை மீண்டும் தியானிக்கவும். இந்த 11 கருத்துக்களும் உங்கள் தனிப்பட்ட வாழ்வில் எதைக் குறிக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவும்.

2) நீங்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்வில், இயேசுவை விசுவாசிக்கவும் அவருடைய சீஷனாக வாழவும் தீர்மானம் செய்துவிட்டீர்களா?

# 4

# இயேசுகிறிஸ்துவின் மீது நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்கான சாட்சி

கர்த்தராகிய இயேசு பரலோகத்திற்கு ஏறிப்போன பின்பு, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி, பெந்தேகோஸ்தே நாளில், 120 சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றார்கள். எருசலேம் நகரம் துவங்கி, மற்ற நகரங்கள் அனைத்திலும், இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை மக்களுக்குப் பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்.

## இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி

இந்த உலக மக்களைப் பாவத்திலிருந்தும், பாவத்தின் தாக்கத்தினால்ஏற்பட்டவிளைவுகளிலிருந்தும்இரட்சிக்கவே, இயேசு இந்த உலகிற்கு இரட்சகராக வந்தார் என்பதுதான் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியாகும். நமது பாவத்திற்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டு நாம் மரிக்கவேண்டிய இடத்தில் அவர் மரித்தார். அதன் மூலம் பாவத்தின் வல்லமையையும், சாத்தானுடைய வல்லமையையும் மற்றும் வியாதியையும் நொறுக்கிப்போட்டு, இருளின் ஆதிக்கத்தில் இருந்த நம்மை விடுவித்து, இரட்சிப்பு என்ற இலவசமான வரத்தை நமக்குக் கொடுத்தார். அவர் சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து, பரத்திற்கு ஏறிச்செல்லும் முன்பு, சுமார் 500 பேர்களுக்கும் அதிகமானோருக்கு தான் உயிரோடு இருப்பதைக் காண்பித்தார். ஆகவே, தங்கள் பாவங்களுக்காக

மனந்திரும்பி, அவரை விசுவாசித்து, தேவன் காட்டும் வழியில் வாழத் தீர்மானிக்கிற அனைவருக்கும், இரட்சிப்பு என்ற வரத்தை இயேசு கொடுக்கிறார். கர்த்தராகிய இயேசுவை நாம் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளும்போது, நாம் மறுபடியும் பிறந்துவிட்டோம், தேவனுடைய பிள்ளைகளாக்கப்பட்டோம், அந்தகாரத்திலிருந்து மகிமையான ராஜ்யத்திற்குள் வரவழைக்கப்பட்டோம் மற்றும் அநேக நன்மைகளை அடைந்தோம். இதுதான் நற்செய்தி! ஒரு மதம் இதை நமக்குச் செய்ய முடியாது. நம்முடைய சொந்த பக்தி, நல்ல செயல்கள் மற்றும் மதச்சடங்குகளால் இந்த வாழ்க்கையை நாம் பெற முடியாது. இது தேவனுடைய ஈவு. தேவன் தம்முடைய குமாரன் மூலம் செய்ததை விசுவாசிப்பதால், இந்த ஈவு நமக்குக் கிடைக்கிறது.

## நீங்கள் இயேசுவை விசுவாசித்தால், வந்து ஞானஸ்நானம் பெறுங்கள்

அப்போஸ்தலர் நடபடிகளில் எழுதப்பட்டதை நாம் கவனித்தால், இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கிக்கையில் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கான அழைப்பு ஜனங்களுக்கு விடுக்கப்பட்டது என்ற விஷயம் அதில் பதிவு செய்யப்பட்டிருந்ததை நாம் பார்க்கிறோம். அதன் பின்னர், இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதன் மூலமாக, தங்கள் விசுவாசத்தை பொதுமக்கள் முன்னிலையில் அறிவிப்பதற்கு (பகிரங்க அறிவிப்பு செய்தல், வெளிப்படையாக சாட்சி சொல்லுதல்) அழைக்கப்படுகிறார்கள்.

அவ்வாறாக, அப்போஸ்தலருடைய நடபடிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிற சம்பவங்களான ஜனங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்த சில நிகழ்வுகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

- பெந்தேகோஸ்தே நாளில் விசுவாசிகளானவர்கள்

(அப்போஸ்தலர் 2:38-41)

- சமாரியா பட்டணத்தில் விசுவாசிகளானவர்கள் (அப்போஸ்தலர் 8:12,13)
- பவுலாக மாறிய சவுல் (அப்போஸ்தலர் 9:17,18; அப்போஸ்தலர் 22:16)
- கொர்நேலியு மற்றும் அவன் குடும்பத்தார்கள் (அப்போஸ்தலர் 10:47,48)
- பிலிப்பு பட்டணத்தின் விசுவாசிகள் (அப்போஸ்தலர் 16:14,15,31-34)
- கொரிந்து பட்டணத்தின் விசுவாசிகள் (அப்போஸ்தலர் 18:7,8)
- எபேசு பட்டணத்தின் விசுவாசிகள் (அப்போஸ்தலர் 19:1-5)

## வெளிப்படையான அறிக்கை

இவ்வாறாக, ஆதித்திருச்சபையில் பெரும்பாலானவர்கள், தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கத் தீர்மானித்தபொழுது, அது அவர்களுக்கு அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. இயேசுகிறிஸ்துவை அவர்கள் விசுவாசித்து வாழத் தீர்மானித்தபோது, அவர்களில் அநேகர் பல உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இருந்தபோதிலும், தாங்கள் நம்புகிறவர் யார் என்பதை உறுதியாக அறிந்து, தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து நின்றார்கள்.

பூலோகத்தில் உள்ள ஜனங்களுக்கு முன்பாக நாம் கர்த்தராகிய இயேசுவை வெட்கப்படாமல் அறிக்கையிட்டால், அவரும் பரலோகத்தில் உள்ள பிதாவானவர் முன்பாக நம்மை தம்முடைய சொந்த ஜனங்களாக அறிக்கை செய்வார் அல்லது அங்கீகரிப்பார் என்று கர்த்தராகிய இயேசு நமக்கு

வாக்குபண்ணி இருக்கிறார்.

**மத்தேயு 10:32-33**
**32 மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்.**
**33 மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.**

இயேசுகிறிஸ்துதான் உங்களுடைய வாழ்க்கையின் இரட்சகரும் கர்த்தருமாய் இருக்கிறார் என்று உங்கள் விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கை செய்தலின் அடையாளமே முழுக்கு ஞானஸ்நானமாகும். உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட நீங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்கள் என்பதையும், இரட்சிப்பின் இலவசமான ஈவை பெற்றுக்கொண்டீர்கள் என்பதையும் ஜனங்களுக்கு முன்பாக நீங்கள் அங்கீகரித்து, சாட்சி பகர்ந்து, அறிக்கையிடுவதன் அடையாளம்தான் இது.

## கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுதல்

அப்போஸ்தலருடைய நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மக்கள் விசுவாசித்தவுடனே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் அவர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இதற்கான சில குறிப்புகளை இங்கே காணலாம்.

**அப்போஸ்தலர் 2:38**
**பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**

**அப்போஸ்தலர் 8:15**
**இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,**

**அப்போஸ்தலர் 10:48**
**கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.**

**அப்போஸ்தலர் 19:5**
**அதைக் கேட்டபோது, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.**

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் நீங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்பொழுது, அது நீங்கள் அவரோடுஉங்களைஅடையாளப்படுத்திக்கொள்ளுகிறீர்கள் என்பதைக் குறிக்கிறது. நீங்கள் பகிரங்கமாக இயேசுவோடு அடையாளப்படுத்தப்படுகிறீர்கள். இதற்கு ஆவிக்குரிய அர்த்தமும் இருக்கிறது, அதைப் பின்வரும் அத்தியாயத்தில் நாம் தெளிவாகப் பார்க்கலாம்.

“கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில்” என்ற பதத்தை நாம் உபயோகிக்கும்பொழுது, அது நாம் யாருடைய அதிகாரத்தில் இதைச் செய்கிறோம் மற்றும் யாருடைய பிரதிநிதியாக இதைச் செய்கிறோம் என்பதைக் குறிக்கிறது. ஆகவே, “கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில்” நான் உனக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்று ஒருவர் சொல்லும்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த பிரதான கட்டளையின் (முன் அத்தியாயத்தைப் பார்க்கவும்) அடிப்படையில், அவர் கொடுத்த அதிகாரத்தில் அதைச் செய்கிறார் என்பதைக் குறிக்கிறது, இவ்வாறாக, புதிய சீஷர்களுக்கு நாம் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறோம். அதைச் செய்ய நாம் முழு அதிகாரமும் வல்லமையும் பெற்றவர்களாக, அவர் சார்பாகவும்

அவருடைய பிரதிநிதியாகவும் நின்று அவருடைய நாமத்தில் இதைச் செய்கிறோம்.

இவ்வாறாக, நாம் ஜனங்களுக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது, "இயேசுவின் நாமத்தில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்று சொல்கிறோம். இதன் பொருள் என்னவென்றால், இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தினால், வேதாகமத்தில் சொல்லப்பட்ட தேவனோடு இயேசுகிறிஸ்து மூலமாக இந்த நபர் இணைந்து வாழ இதைச் செய்கிறோம் என்பதை வெளிக்காட்ட நாம் இதைச் செய்கிறோம் என்பதேயாகும்.

## சிந்தனைக்கு

1) இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை (நற்செய்தி) நீங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டீர்களா மற்றும் விசுவாசிக்கிறீர்களா?

2) "இயேசுகிறிஸ்துதான் உங்களது இரட்சகரும் கர்த்தருமாய் இருக்கிறார் என்று பகிரங்கமாக அறிக்கையிட நீங்கள் ஆயத்தமா?

# 5

# இயேசுவுடனான உங்கள் அடையாளத்தின் பிரகடனம்

கர்த்தராகிய இயேசு திருச்சபையில் இரண்டு அனுஷ்டிப்புகளை ஏற்படுத்தி இருக்கிறார். அவை முழுக்கு ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி என்பவைகளாகும். தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக இயேசு நமக்காக என்ன செய்தார் என்பதைப் பிரகடனப்படுத்த இந்த இரண்டுமே ஆற்றல் மிக்க வழிகளாக இருக்கின்றன. கர்த்தருடைய ஏவுதலின்படி, 1 கொரிந்தியர் 11:26-ல் அப்போஸ்தலனாகிய பவுல், *"ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"* என்று எழுதியிருக்கிறார். ஆகவே, நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்பொழுது, சிலுவையில் இயேசுகிறிஸ்து நமக்காக நிறைவேற்றியதையும், அவரது இரண்டாம் வருகையையும் நாம் விசுவாசிப்பதை மக்களுக்குத் தெரிவிக்கிறோம், அறிவிக்கிறோம் மற்றும் பிரகடனப்படுத்துகிறோம்.

இதைப்போலவே, முழுக்கு ஞானஸ்நானம் என்பது இயேசுவுடனான நமது அடையாளத்தை பிரகடனப்படுத்துவதாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் நமக்காக செய்து முடித்த செயலால் நம் வாழ்வில் நிகழ்ந்தவைகளை, நாம் காண்கிறதும் மற்றும் நம்மால் காண முடியாததுமான உலகத்திற்கு முழுக்கு ஞானஸ்நானம் மூலம் வெளிப்படையாக அறிவிக்கிறோம் மற்றும் பிரகடனப்படுத்துகிறோம். இது

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் நடந்த மாற்றத்தின் வெளித்தோற்றமாகும். இது ஏற்கனவே நம் வாழ்வில் எற்பட்ட மாற்றமாகும். **அதாவது, நம் ஆவிக்குரிய வாழ்வில் ஏற்கனவே ஏற்பட்ட மாற்றங்களை அறிவித்தலின் அடையாளமும் வல்லமையான பிரகடனமுமே முழுக்கு ஞானஸ்நானமாகும்.**

அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே இவ்வாறாகக் குறிப்பிடுகிறார்:

**ரோமர் 6:3,4**

**3 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?**

**4 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.**

**கொலோசெயர் 2:12**

**ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.**

நாம் மறுபடியும் பிறந்தபொழுது, தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் கூட்டிச்சேர்க்கிறார் (1 கொரிந்தியர் 1:30). நாம் அவரில், அவருடைய ஆவியோடு ஒன்றாக இணைக்கப்படுகிறோம் (1 கொரிந்தியர் 6:17). பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவோடு இணைக்கிறார் (1 கொரிந்தியர் 12:13). ஆவிக்குரிய வாழ்வில் நாம் ஏற்கனவே இயேசுவோடு இணைந்துவிட்டோம். அதுமட்டுமின்றி, நாம் அவருக்குள் இருக்கிறபடியால், அவருடைய மரணத்திலும் (சிலுவையில் அறையப்படுதல்), அடக்கம்பண்ணப்படுதலிலும், உயிர்த்தெழுதலிலும், பரமேறிச் செல்லுதலிலும்

மற்றும் அவரோடேகூட உட்காரவைக்கப்படுதலிலும் நாம் அடையாளப்படுத்தப்பட்டோம். இதுதான் அடையாளப்படுத்தப்படுதல் என்று அழைக்கப்படுகிறது.

- **இயேசுவின் மரணத்தில் அடையாளப்படுத்தப்படுதல் (சிலுவையில் அறையப்படுதல்):** இயேசு மரித்தபொழுது, நாமும் அவரோடு சேர்ந்து மரித்தோம். ஏனெனில், நம்முடைய பழைய பாவ சுபாவம் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டது; *"பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டான்"* (ரோமர் 6:6). நமக்குள் இப்பொழுது அந்தப் பழைய பாவ சுபாவம் இல்லை. இப்பொழுது நாம் அவருடைய தெய்வீக சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகிறோம் (2 பேதுரு 1:4). நம் வாழ்க்கையை ஆட்கொண்ட பாவத்தின் வல்லமை இப்பொழுது நொறுங்கிப்போனது. ஆகவே, நாம் இப்பொழுது பாவத்திற்கு அடிமைகள் அல்ல (ரோமர் 6:14).
- **இயேசுவின் அடக்கத்தில் அடையாளப்படுத்தப்படுதல்:** கிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டபோது, நாமும் அவரோடுகூட அடக்கம் பண்ணப்பட்டோம். நாம் நம்முடைய பழைய வாழ்விலிருந்து பிரிக்கப்பட்டோம். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாகிவிட்டன, நாம் புது சிருஷ்டிகளாய் இருக்கிறோம்; ஆகவே, பழைய வாழ்க்கைக்கும் நமக்கும் இப்பொழுது எந்தத் தொடர்பும் இல்லை, எந்தப் பங்கும் இல்லை என்பதே இதன் அர்த்தமாகும். (2 கொரிந்தியர் 5:17)
- **இயேசுவின் உயிர்த்தெழுதலில் அடையாளப்படுத்தப்படுதல்:** இயேசுகிறிஸ்து உயிரோடு எழுந்தபொழுது, நாமும் அவரோடுகூட உயிரோடு எழுப்பப்பட்டோம் (எபேசியர் 2:5). நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே இதன் அர்த்தமாகும். சாத்தானுடைய வல்லமையின் பிடியிலிருந்து, தேவனுடைய ஆளுகைக்குள் வந்திருக்கிறோம் (கொலோசெயர் 1:13). நாம்

இப்பொழுது தேவனுடைய ராஜ்யத்தில், புதியதொரு வாழ்க்கை வாழ்கிறோம். புதிய வாழ்க்கைக்கான வழியைப் பெற்றிருக்கிறோம். அந்தகாரத்தின் வல்லமை இப்பொழுது நம்மை ஒன்றும் செய்ய முடியாது.

- **அவரது பரமேறிச்செல்லுதலில் அடையாளப்படுத்தப்படுதல்:** கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றபொழுது, நாமும் அவரோடுகூட பரலோகத்திற்குச் சென்றோம் (எபேசியர் 2:6; கொலோசெயர் 3:1-3). ஆகவே, நாம் இப்பொழுது மேலானவைகளின் மீதே அதிக நாட்டம் கொள்கிறோம். பரலோக கண்ணோட்டத்தில் வாழ்க்கையைப் பார்த்து, புதிய மனதோடு இப்பொழுது வாழ்கிறோம். நம்முடைய வாழ்க்கை கிறிஸ்துவோடுகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது.
- **அவரோடேகூட உட்கார வைக்கப்படுதலில் அடையாளப்படுத்தப்படுதல்:** கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார வைக்கப்பட்டபோது, நாமும் அவரோடேகூட உட்கார வைக்கப்பட்டோம் (எபேசியர் 2:6). சாத்தானும் அவனுடைய சர்வ சேனைகளும் நமது பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும்படியாக, நாம் கிறிஸ்துவில் அதிகாரமும் ஆளுகையும் கொண்ட ஒரு இடத்தில் உட்கார வைக்கப்பட்டோம்.

தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பது என்பது, இதுபோன்ற அனைத்தின் வெளிப்படையான அடையாளமாகும். நீங்கள் தண்ணீருக்குள் முழுகும்பொழுது (மூழ்குதல், தண்ணீருக்குள் செல்லுதல்), அது நீங்கள் இயேசுவோடு சேர்ந்து மரித்து(சிலுவையில் அறையப்படுதல்), அடக்கம் செய்யப்படுவதைக் குறிக்கிறது. நீங்கள் தண்ணீரிலிருந்து வெளியே வரும்பொழுது, இயேசுவோடு கூட நீங்கள் உயிரோடு எழுந்து, பரத்திற்கு ஏறிச் சென்று, பிதாவின் வலதுபாரிசத்தில் உட்காருவதைக் குறிக்கிறது.

**நீங்கள் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும்பொழுது, நீங்கள் உங்கள் பழைய வாழ்க்கைக்கு மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிரோடு எழுந்து, பரலோகத்திற்குச் சென்று, பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து ஆவிக்குரிய ரீதியில் இயேசுகிறிஸ்துவோடு இணைந்துவிட்டீர்கள் என்பதை காண்கிறதும் காணக்கூடாததுமான உலகத்திற்கு நீங்கள் அறிக்கை செய்கிறீர்கள். முழுக்கு ஞானஸ்நானம் ஒரு அடையாளத்திற்கான செயலும் அதிக வல்லமையுள்ளதுமாய் இருக்கிறது. நீங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும் தருணத்தில், பரிசுத்த ஆவியானவரின் கிரியை மூலமாக சிலுவையின் வல்லமை உங்களிடத்தில் செயல்படுவதை நீங்கள் எதிர்பார்க்கலாம்.** உங்கள் கடந்த கால வாழ்வில் உள்ள (பாவங்கள், அடிமைத்தனங்கள், அவமானம், வேதனையான நிகழ்வுகள்) காரியங்கள் மீண்டும் உங்கள் மனதில் உறுத்துதலை ஏற்படுத்தி, உங்களைப் பயமுறுத்தி கட்டுப்படுத்துமானால், உங்கள் மீது அது கொண்டிருந்த வல்லமைகள் அனைத்தையும் இயேசு சிலுவையில் முறியடித்தார் என்று நீங்கள் தைரியமாகச் சொல்ல வேண்டும். இவ்வாறாக, உங்கள் பழைய வாழ்வின் காரியங்கள் எதுவும் உங்கள் புதிய வாழ்வில் தொடராதபடி, அவைகளை முறியடிக்க முழுக்க ஞானஸ்நானம் பற்றிய உங்கள் பிரகடனத்தைச் செய்யுங்கள்.

நாம் இப்பொழுது, கிறிஸ்துவை ஆடையாகத் தரித்துக்கொண்டோம் என்று பவுல் குறிப்பிட்டார்.

**கலாத்தியர் 3:27**

**ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.**

நாம் இப்பொழுது இயேசுவோடு ஒன்றிணைந்துவிட்டபடியால், நம்மைப் பார்க்கிறவர்கள், நம்மில் இயேசுவைப் பார்க்க

வேண்டும். ஏனெனில், நாம் நம்மை மறைத்து, கிறிஸ்துவை ஒரு உடையாகத் தரித்திருக்கிறோம். நாம் கிறிஸ்துவை தரித்துக்கொண்டபடியால், ஆவியானவரின் உதவியால், நாம் கிறிஸ்துவின் குணங்களில் நாள்தோறும் வளரும்போது, நம்முடைய புதிய மனிதனின் வளர்ச்சியை மக்கள் பார்ப்பார்கள்.

## சிந்தனைக்கு

பின்வரும் அனைத்திலும் நீங்கள் கிறிஸ்துவோடு ஆவிக்குரிய விதத்தில் அடையாளப்படுத்தப்பட்டு வாழ்கிறீர்கள்:

1) அவருடைய மரணம்(சிலுவையில் அறையப்படுதல்) (ரோமர் 6:6)
2) அவருடைய அடக்கம் (ரோமர் 6:4)
3) அவருடைய உயிர்த்தெழுதல் (எபேசியர் 2:5)
4) அவருடைய பரமேறுதல் (எபேசியர் 2:6)
5) அவரோடேகூட உட்கார வைக்கப்படுதல் (எபேசியர் 2:7)

இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டதின் அடிப்படையில், இந்த ஐந்து காரியங்களின் ஒவ்வொரு அம்சமும் உங்கள் தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்படி அர்த்தமுள்ளதாய் இருக்கிறது என்று சிந்திக்கவும்.

# 6
# நல்மனசாட்சியின் உணர்வு

நோவா கட்டிய பேழை மூலம் ஜலப்பிரளயத்திற்குத் தப்பிய 8 நபர்கள் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதியுள்ளார். அவர்கள் எப்படி ஜலப்பிரளயத்தின் அழிவிலிருந்து தப்பித்தார்களோ, அதற்கு அடையாளமாகவே முழுக்கு ஞானஸ்நானம் இருக்கிறது என்றும், நாமும்கூட மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு பரலோகத்தில் உன்னதங்களில் பிதாவானவருடைய வலதுபாரிசத்தில் உட்கார வைக்கப்பட்டிருக்கிறவரான இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம் என்றும் குறிப்பிடுகிறார்.

**1 பேதுரு 3:20-22**

**20 அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.**
**21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.**
**22 அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.**

முழுக்கு ஞானஸ்நானம் பற்றி பேதுரு எழுதும்பொழுது, அது நம்முடைய சரீரத்தில் உள்ள அழுக்கை நீக்குகிற வெளிப்புறமான சுத்திகரிப்பாக இல்லாமல், நம்முடைய மனசாட்சி தேவன் பார்வையில் சுத்தமுள்ள (கழுவப்பட்ட) நல்மனசாட்சியாகிறது என்று குறிப்பிடுகிறார். கர்த்தராகிய

இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் நாம் விசுவாசிக்கும்பொழுது, உண்மையிலேயே இதுதான் நம் வாழ்க்கையில் நடைபெற்றது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நாம் விசுவாசிக்கும்பொழுது, அவருடைய இரத்தம் நம்முடைய பாவங்களைக் கழுவினது, தொடர்ந்து கழுவிக்கொண்டே இருக்கிறது. நாம் கிறிஸ்துவில் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் நாம் அவருடைய பார்வையில் சுத்தமுள்ளவர்களாகி, அவருடைய பிரசன்னத்தில் சேரத்தக்கவர்களாக தேவனுக்குப் பிரியமானவர்களாகிறோம். நம்முடைய மனசாட்சி தேவனுடைய பார்வையில் சுத்தமுள்ள நல்மனசாட்சியாகிறது. ஆகவே, தேவனோடு தொடர்புகொள்ளும்பொழுது, நமக்குக் குற்ற உணர்வோ, வெட்கமோ, தவறு செய்தவர்களாய் இருக்கிறோம் அல்லது ஆக்கினைக்கு உள்ளாக்கப்படுவோம் என்ற உணர்வோ எவ்விதத்திலும் நமக்கு வருவதில்லை. ஆகவே, இயேசுகிறிஸ்து ஒருவரால் மட்டுமே, தேவனுடனான அப்படிப்பட்ட ஒரு உறவுக்குள் நம்மைக் கொண்டுவர முடியும். **இயேசுகிறிஸ்து மூலமாக உங்கள் மனசாட்சி சுத்தமுள்ள நல்மனசாட்சியாக மாறினபடியால், நீங்கள் இப்பொழுது தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தீர்கள். ஆகவே, முழுக்கு ஞானஸ்நானம் என்பது தேவனுடைய பார்வையில் சுத்தமுள்ள நல்மனசாட்சியுள்ளவராக ஒருவர் மாறினார் என்பதின் அடையாளமாக இருக்கிறது.**

இயேசுகிறிஸ்து நமக்காகச் செய்து முடித்த கிரியையை நாம் விசுவாசித்து வாழ்வதன் மூலமாகவும், அனுதின வாழ்வில் அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதன் மூலமாகவும், தேவனுடைய பார்வையில் நாம் நல்மனசாட்சியைக் காத்துக்கொள்கிறோம்.

**1 யோவான் 3:20-22**

**20 நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்.**

**21 பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து,**

**22 அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.**

நம்முடைய மனசாட்சி சுத்தமாக இருக்கும்பொழுது, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றப்படுத்தாது மற்றும் நாம் தேவனுக்கு முன்பாக தைரியமுள்ளவர்களாக இருக்கிறோம். ஒருவேளை நம்முடைய இருதயம் நம்மைக் "குற்றப்படுத்தினால்", அதாவது நம்முடைய மனசாட்சி சுத்தமில்லை என்றால், அப்போது, நம் உள்ளத்தில் ஏதோ குற்றம் இருக்கிறது. தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், ஆகவே நாம், 1யோவான் 1:9 சொல்லப்பட்டிருக்கிறபடி, அறிந்தோ அறியாமையிலோ செய்யப்பட்ட எந்த ஒரு பாவத்தையும் அறிக்கையிட்டு ஒப்புக்கொண்டு அவருடைய இரத்தம் நம்முடைய பாவங்களைக் கழுவுமாறு மன்றாட வேண்டும். அதன் பின்னர், கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தால், நம் மனசாட்சி சுத்தமுள்ள நல்ல மனசாட்சியாகி, நாம் தேவனோடு இணைந்து தொடர்ந்து வாழ முடியும். நாம் தொடர்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய பார்வைக்குப் பிரியமாய் நடப்போம். இவ்வாறாக, நாம் தேவனுக்கு முன்பாக நல்மனசாட்சியைக் காத்துக்கொள்கிறோம்.

## சிந்தனைக்கு

1) இந்த அத்தியாயத்தில் பார்த்தபடி, தேவனிடத்தில் “நல்மனசாட்சி” உடையவர்களாய் இருப்பது என்றால் என்ன?

2) முழுக்கு ஞானஸ்நானம் எடுத்த பின்பும், உங்கள் அனுதின வாழ்வில் நல்மனசாட்சியைக் காத்துக்கொள்வது எப்படி?

# 7
# பொதுவான கேள்விகளுக்கான பதில்கள்

இந்த அத்தியாயத்தில், நாங்கள் முழுக்கு ஞானஸ்நானம் குறித்த பொதுவான கேள்விகளுக்கான பதில்களைச் சுருக்கமாகத் தொகுத்திருக்கிறோம். இறையியல் மற்றும் வேத வாக்கியங்களின் அடிப்படையிலான கருத்துக்களை இதற்கு முந்தைய அத்தியாயங்களில் ஏற்கனவே கொடுத்திருக்கிறபடியால், அவைகளை இந்த அத்தியாயத்தில் மீண்டும் குறிப்பிடவில்லை.

## 1) முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க சரியான வயது எது?

ஒரு நபர் எந்த வயதில் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்பது வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கத் தேவையான முன்தகுதியாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளை எடுத்துக்கொள்ளலாம்—அதாவது, மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொண்ட நபர் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும் தகுதியைப் பெறுகிறார்கள். ஒரு குழந்தைக்கு இந்தத் தகுதி இல்லாதபடியால், குழந்தை ஞானஸ்நானம் என்பது வேதாகமத்தில் குறிப்பிடப்படாத ஒன்றாகும். ஆகவே, ஒருவர் தன்னுடைய எந்த வயதிலும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைக் கேள்விப்பட்டு, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு, மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து வாழத் தீர்மானிக்கும்பொழுது, தண்ணிரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கத் தகுதியுள்ளவராகிறார்.

## 2) இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கக் காத்திருக்க வேண்டிய கால அளவு ஏதாவது இருக்கிறதா?

காத்திருக்கும் கால அளவு எதுவும் தேவையில்லை. அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் அனைத்திலும், ஜனங்கள் மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கத் தீர்மானித்த உடனேயே, அவர்களுக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், முழுக்கு ஞானஸ்நானம் குறித்த அர்த்தங்களைப் புரிந்துகொள்ளும்படி சொல்லிக்கொடுத்து, மற்றவர்களுடைய கட்டாயமோ, வற்புறுத்துதலோ இல்லாமல், அவர்களது சொந்த விருப்பப்படி, முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும் தீர்மானங்களை அவர்களாகவே எடுக்க, அவர்களுக்கு நேரங்களைக் கொடுப்பது அவசியம்.

## 3) நாம் பயன்படுத்தும் ஞானஸ்நானத்திற்கான சூத்திரம் எது?

கர்த்தராகிய இயேசுவால் நமக்குக் கொடுக்கப்பட்ட பிரதான கட்டளையின் அடிப்படையிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பின்பற்றப்பட்டுள்ள முறைமைகளின் அடிப்படையிலும், நாம், "இயேசுவின் நாமத்திலும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்திலும் நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்ற வாக்கியத்தைப் பயன்படுத்துகிறோம்.

## 4) ஒரு விசுவாசிக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அதிகாரம் உடையவர் யார்?

ஏற்கனவே தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து, இயேசுவின் சீஷனாக வாழ்கிற எவரும், இயேசுகிறிஸ்துவைப்

பின்பற்றி வாழத் தீர்மானித்த மற்ற நபருக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

## 5) நான் மீண்டும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா?

புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் குழந்தைக்கு வழங்கப்படும் தெளிப்பு ஞானஸ்நானம் அங்கீகரிக்கப்படாத ஒன்றாக இருக்கிறபடியால், அதைத் தண்ணீரில் மூழ்கி எடுத்த ஞானஸ்நானத்துடன் ஒப்பானதாகக் கருதி, ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, குழந்தையாக இருக்கும்பொழுது தெளிப்பு ஞானஸ்நானம் பெற்ற ஒருவர், இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொண்ட பின்பு, (முழுவதும் மூழ்கி/ தண்ணீருக்குள் சென்று) தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

வேறு சிலரைப் பொறுத்தவரையில், இரட்சிப்பின் அனுபவம் இல்லாமலும், இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரை விசுவாசித்து வாழத் தீர்மானிக்காமலும், தன் குடும்பத்தார்கள் மற்றும் நண்பர்களின் கட்டாயத்தினால் ஞானஸ்நானம் எடுத்திருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசித்து வாழத் தீர்மானிக்கும்போது, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க நாங்கள் அவர்களை உற்சாகப்படுத்துகிறோம்.

சில சூழ்நிலைகளில், முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டும் தேவனோடு நடப்பதை விட்டும் வழி விலகிச் சென்று, பின்பு மீண்டும் கர்த்தரிடத்திற்குத் திரும்பியதன் அடையாளமாக, மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறார்கள். இது, மற்றவர்களுடைய கட்டாயத்தினால் அல்லாமல், அப்படிப்பட்டவர்களுடைய

தனிப்பட்ட தீர்மானமானத்தின்படி அவர்கள் அப்படிச் செய்யலாம்.

## 6) இரட்சிக்கப்படுவதற்கு முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா அல்லது அது இரட்சிப்பின் வெளிப்பாடாக இருக்கிறதா?

இரட்சிப்பு என்பது, கிறிஸ்து மீது நாம் வைக்கும் விசுவாசத்தாலும், அவர் நம்மீது காட்டும் கிருபையினாலும் கிடைப்பதாகும். அப்படிப்பட்ட இரட்சிப்பை ஒருவர் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாகவே முழுக்கு ஞானஸ்நானம் இருக்கிறது. இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களில், தம்மைப் பின்பற்றி வாழத் தீர்மானித்தவர்களுக்கு (தம்முடைய சீஷர்கள் மூலம்) முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்றபோதிலும், தம்முடன் சிலுவையில் அறையப்பட்ட கள்ளனுக்கு பரலோகத்தை வாக்குப்பண்ணி, அவனை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தினார். அப்படியாகச் சிலுவையில் தொங்கியபொழுது இரட்சிப்பைப் பெற்ற அந்தக் கள்ளனுக்குத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதைப்போலவே, இந்தப் பூமியில், தங்களது இறுதி நாட்களில் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கத் தீர்மானித்த பின்பு, ஞானஸ்நானம் எடுக்கும் வாய்ப்பைப் பெறாமல் போனவர்கள் பலர் இருக்கலாம். அவர்கள் கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட நம்மைப் பொருத்தவரையில், முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பது, தேவன் கொடுத்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நிறைவேற்றுகிற ஒரு செயலாகும்.

## 7) மரித்தவர்களுக்காக நாம் ஞானஸ்நானம் எடுக்கலாமா?

1 கொரிந்தியர் 15:29ம் வசனத்தை சிலர் சுட்டிக்காட்டி,

மரித்தவர்களின் இரட்சிப்புக்காக நாம் ஞானஸ்நானம் எடுக்கலாமா என்று கேட்கிறார்கள்.

**1 கொரிந்தியர் 15:29**
**மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?**

மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்க்கை பற்றியும், மரித்தவர்கள் உயிரோடு எழுந்திருக்கிறது பற்றியும் அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில், விளக்குகிறார். அப்படி விளக்கும்பொழுது, "அவர்கள்" (நாம் அல்ல), அதாவது மரித்தவர்களுக்காகத் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்கிறவர்கள் என்று ஒரு கூட்டத்தாரைப் பற்றிய ஒரு கருத்தைச் சொல்லுகிறார். அதில் "அவர்கள்" என்ற அந்த வார்த்தை கிறிஸ்தவ விசுவாசத்தைப் பின்பற்றுகிறவர்களாகிய நம்மைப் பற்றிக் குறிப்பிடாமல், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுப்பதால் மரித்தோருடைய வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற மூடநம்பிக்கையில் சடங்காச்சாரங்களை அனுஷ்டிக்கும் கூட்டத்தினரைப் பற்றியே குறிப்பிடுகிறார். அவர்கள் அவ்வாறு செய்வதைப் பவுல் சரி என்று குறிப்பிடாமல், அப்படிப்பட்டவர்களுக்கு, மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை இருக்கிறது என்ற நம்பிக்கையில்தானே, அப்படிப்பட்ட சடங்குகளைச் செய்கிறார்கள் என்ற பொருளில் அதைக் குறிப்பிடுகிறார். அதைத் தவிர்த்து, மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் எந்தப் பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, மரித்தவர்களுக்காக நாம் ஞானஸ்நானம் எடுக்கத் தேவை இல்லை என்பது மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் தெரியவருகிறது.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற

விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play







*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் வாழ்க்கையில் முழுக்கு ஞானஸ்நானம் என்பது மிக முக்கியமான ஒரு அனுபவமாகும். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரைப் பின்பற்றத் தீர்மானித்த நாம் அனைவருமே நிச்சயமாக ஒரு கட்டத்தில், இந்த முழுக்கு ஞானஸ்நான அனுபவத்திற்குள் வருகிறோம். முழுக்கு ஞானஸ்நானம் என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொண்ட அனைவருக்கும் கொடுத்த ஒரு கட்டளையாகும். அவருடைய கட்டளைக்கு நாம் அனைவருமே கீழ்ப்படிய வேண்டும். ஆகவே, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கத் தயாராகும் நீங்கள், அதன் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் தேவனுடைய வார்த்தையிலிருந்து எளிதாகப் புரிந்துகொள்ள, இந்தச் சிறிய புத்தகம் உங்களுக்கு உதவி புரியும்.

முழுக்கு ஞானஸ்நானம் பற்றிய முக்கியமான ஆறு சத்தியங்களை இதில் நாங்கள் தொகுத்து எழுதியிருக்கிறோம். அவை:

1) மனந்திரும்பியதற்கான ஓர் அடையாளம்
2) அனைத்து நீதிகளையும் நிறைவேற்றுதல்
3) நீங்கள் இயேசுவின் சீஷர் என்பதற்கான சாட்சி
4) இயேசுகிறிஸ்துவின் மீது நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்கான சாட்சி
5) இயேசுவுடனான உங்கள் அடையாளத்தைப் பிரகடனப்படுத்துதல்
6) நல்மனசாட்சியின் உணர்வு

மேலும், முழுக்கு ஞானஸ்நானம் பற்றிய மக்களுடைய பல பொதுவான கேள்விகளுக்கும் இந்தப் புத்தகத்தின் மூலம் பதில் அளித்திருக்கிறோம்.

**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org